# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 173/2022

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 1 (LW –1) | நாள் | 16.02.2026 |
| பெயர் | ராஜேஷ் | தொழில் | மீன் பிடி |
| தந்தை பெயர் | பாலையா | கிராமம் | பூம்புகார் |
| தாலுக்கா | சீர்காழி | வயது | 36. |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் பூம்புகார் மீனவ கிராமத்தில் வசித்துவருகிறேன். மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்கள். கடந்த 08.04.2021 அன்று மதியம் 2.00 மணியளவில் கடலுக்கு சென்றுவந்து நான், என் அண்ணன் ஜெயக்குமார், ரீகன் என்ற கிருஷ்ணமூர்த்தி, செந்தில், கஜேந்திரன், ராஜ்குமார் ஆகியோர் வலையிலிருந்த மீன்களை எடுத்துகொண்டிருந்தோம். அப்போது கடற்கரை ஹாா்பரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எங்கள் போட் மீது சுகுந்தன் போட் கரையேறும் போது வந்து மோதிவிட்டது. அதனால் எங்கள் போட் எஞ்ஜின் சேதமடைந்துவிட்டது. இது சம்பந்தமாக நாங்கள் கேட்டபோது எங்களுக்கும் சுகுந்தன் வகையறாவிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அஞ்சப்பன், த/பெ. காத்தமுத்து, அசோக்குமார், த/பெ. தோமாஸ் ஆகியோர் எங்கள் பிரச்சனையை பேசி வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். பிறகு நாங்கள் வீட்டிற்கு போய்விட்டோம். மறுபடியும் ரீகன் என்ற கிருஷ்ணமூர்த்தி வீட்டிற்கு சென்று பங்கு காசு வாங்க அன்று மாலை 7.00 மணிக்கு சென்றோம். ரீகன் வீட்டிற்கு பக்கத்து வீடு தான்

சுகுந்தன் தம்பி பிரபாகரன் வீடு உள்ளது. சுகுந்தன், சந்தோஷ், பிரதீப், பார்த்திபன், கலைமாறன், ரஞ்சித், சுபாஷ் ஆகியோர் பிரபாகரன் வீட்டிலிருந்து மேற்படி எதிரிகள் உங்கள் போட் மீது மோதினால் ஊர் பஞ்சாயத்திடம் சொல்வீர்களா என்று சொல்லி என்று கேட்டு தகாத வார்த்தைகளால் திட்டி குச்சிக்காரி மகன்களா நீங்களாம் பெரிய ஆளு புண்டையா என்று திட்டி என்னை சுகுந்தன் இரும்பு பைப்பால் இடது முன்னங்கையில் அடித்தார். சந்தோஷ் முதுகில் கட்டையால் அடித்தார். பிரதீப் காலில் கழியால் அடித்தார். இதனால் எனக்கு இடது முன்னங்கையில் வீக்கம் ஏற்பட்டது. என் அண்ணன் ஜெயக்குமார் தலையில் மேல் பகுதியில் சுகுந்தன் இரும்பு பைப்பால் அடித்தார். பிரதீப் என் அண்ணன் முதுகில் கட்டையால் அடித்தார். என்னிடம் காட்டப்படும் **இரும்பு பைப் சாபொ 1** ஆகும். குச்சி போன்ற கழிகள் **இரண்டு சாபொ 2 மற்றும் 3** ஆகும். மூன்று **உருட்டு கட்டைகள் சாபொ 4 முதல் 6** ஆகும். இதனால் என் அண்ணன் மண்டையின் மேற்பகுதியில் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. என் பங்காளி வைரக்கண்ணு மகன் தமிழ்வாணன் என்பவரின் தலையில் இடது பகுதியில் சுகுந்தன் இரும்பு பைப்பால் தலையில் அடித்தார். சுபாஷ், ரஞ்சித், பார்த்திபன் கட்டையால் தமிழ்வாணனை கட்டையால் மாறி மாறி அடித்தார்கள். தமிழ்வாணன் அந்த இடத்திலேயே மயங்கி விழுந்துவிட்டார். இதற்கு பிறகு எங்களிடம் எதாவது வைத்துக்கொண்டால் உயிருடன் விடமாட்டோம் என்று கையில் ஆயுதங்களுடன் மிரட்டினார்கள். ரீகன் என்ற கிருஷ்ணமூர்த்தி என்பவர் எங்கள் ஆட்டோவில் ஏற்றி பூம்புகார் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றார். அங்கு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு போகசொல்லிவிட்டார்கள். பூம்புகார் காவல் நிலையத்திலிருந்து எங்களை

B Pera

விசாரித்து அறிக்கை பெற்றுகொண்டார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில்



உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அசாஆ 1** ஆகும். அரசு மருத்தவமனை மயிலாடுதுறையில் சிகிச்சை எடுத்தோம். பிறகு வைரம் மருத்துவமனையில் நானும் என் அண்ணன் ஜெயக்குமாரும் சிகிச்சை பெற்றோம். தமிழ்வாணனை மட்டும் மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். 25.04.2021 அன்று அவர் சிகிச்சைபலனின்றி உயிரிழந்தார். அவர்கள் அடித்ததால் தான் தமிழ்வாணன் உயிரிழந்தார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை.**

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதுவே என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை